இந்திய அரசு
இந்திய வானிலை ஆய்வு துறை
மண்டல வானிலை ஆய்வு மையம்
6, கல்லூரி சாலை, சென்னை – 600006
தொலைபேசி : 044- 28271951

GOVERNMENT OF INDIA
INDIA METEOROLOGICAL DEPARTMENT
**Regional Meteorological Centre**
**New No. 6, College Road, Chennai–600 006**
**Phone: 044- 28271951**

# வானிலை தகவல்

**நாள்: 13.06.2021** **நேரம்: 1145மணி**

**வடக்கு வங்ககடல் அதனை ஒட்டிய ஒடிசா மற்றும் மேற்கு வங்கத்தின் கடற்கரை ஒட்டி உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு பகுதி அதே பகுதியில் நீடிக்கிறது. அடுத்த 48 மணி நேரத்தில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற கூடும்.**

**இதன் காரணமாக**

**தமிழ்நாட்டில் அடுத்த 24 மணி (13.06.2021) நேரத்தில் நீலகிரி, கோயம்புத்தூர், கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கன மழையும், எஞ்சிய மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய (திருப்பூர், திண்டுக்கல், தேனி,தென்காசி) மாவட்டங்கள் மற்றும் ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், திருநெல்வேலி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும். ஏனைய மாவட்டங்களில் பெரும்பாலும் வறண்ட வானிலையே நிலவும்.**

**14.06.2021,15.06.2021: நீலகிரி, கோயம்புத்தூர், மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கன மழையும், எஞ்சிய மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய ( திருப்பூர், திண்டுக்கல், தேனி, தென்காசி) மாவட்டங்கள் மற்றும் ஈரோடு, தர்மபுரி, சேலம், கரூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும். ஏனைய மாவட்டங்களில் பெரும்பாலும் வறண்ட வானிலையே நிலவும்**

**16.06.2021,17.06.2021: மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய ( நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், திண்டுக்கல், தேனி, தென்காசி) மாவட்டங்கள், உள்மாவட்டங்கள் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய மாவட்டங்களில் பெரும்பாலும் வறண்ட வானிலையே நிலவும்.**

**சென்னையை பொறுத்தவரை**

**அடுத்த 24 மணி நேரத்திற்கு (13-06-21) வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். சென்னை மற்றும் திருவள்ளூர் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய இலேசான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 37 மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 28 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கும்.**

**அதற்கு அடுத்த 24 மணி நேரத்திற்கு (14-06-21) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 37 மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 28 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கும்.**

**கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்ச மழை அளவு (சென்டிமீட்டரில்):**

**சின்னக்கல்லார் (கோவை) 5, அதிராம்பட்டினம் (தஞ்சாவூர்) 4, வேதாரண்யம் (நாகப்பட்டினம்), பரங்கிப்பேட்டை (கடலூர்) தலா 3, பெரிய காலாபேட்டை (புதுச்சேரி), அவலாஞ்சி (நீலகிரி), பெரியாறு (தேனி), ராசிபுரம் (நாமக்கல்), வானூர் (விழுப்புரம்), சிவலோகம் (கன்னியாகுமரி) தலா 2, மணமேல்குடி (புதுக்கோட்டை), கீழ்பென்னாத்தூர் (திருவண்ணாமலை), ஏற்காடு (சேலம்),**

தென்பறநாடு (திருச்சிராப்பள்ளி), பாபநாசம் (திருநெல்வேலி), மரக்காணம் (விழுப்புரம்), மீமிசல் (புதுக்கோட்டை), மயிலாடுதுறை தலா 1.

**மீனவர்களுக்கான எச்சரிக்கை :**
**வங்கக் கடல் பகுதிகள்**

**13.06.2021 முதல் 15.06.2021 வரை :**, மன்னார் வளைகுடா, தெற்கு வங்கக் கடல் மற்றும் மத்திய வங்கக் கடல் பகுதிகளில் பலத்த காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

*************

**அரபிக்கடல் பகுதிகள்:**

**13.06.2021 முதல் 15.06.2021 வரை:** கேரளா, கர்நாடக, கோவா கடலோர பகுதிகள் மற்றும் லட்சத்தீவு பகுதிகளில் பலத்த காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோமீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

**13.06.2021 முதல் 17.06.2021 வரை:** அரபிக்கடல் பகுதிகளில் பலத்த காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் அவ்வப்போது 65 கிலோமீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.
**மீனவர்கள் மேற்குறிப்பிட்ட தேதிகளில் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

மேலும் விவரங்களுக்கு: imdchennai.gov.in இணையதளத்தை காணவும்.

முனைவர் நா. புவியரசன்
இயக்குனர்
சென்னை வானிலை ஆய்வு மையம்.

சென்னை வானிலை ஆய்வு மையம்

**01.06.2021 முதல் 13.06.2021 வரை பெய்த மழை அளவு**

| மாவட்டம் | பதிவான மழை (மி.மீ) | இயல்பு மழை (மி.மீ) | வேறுபாடு (%) |
|---|---|---|---|
| அரியலூர் | 52.2 | 31.4 | 66 |
| செங்கல்பட்டு | 9.4 | 22.5 | -58 |
| சென்னை | 33.9 | 23.9 | 42 |
| கோயம்புத்தூர் | 57.2 | 56.1 | 2 |
| கடலூர் | 37.1 | 23.0 | 62 |
| தர்மபுரி | 55.2 | 37.3 | 48 |
| திண்டுக்கல் | 67.7 | 24.7 | 174 |
| ஈரோடு | 25.9 | 23.7 | 9 |
| கள்ளக்குறிச்சி | 14.2 | 25.2 | -44 |
| காஞ்சிபுரம் | 25.3 | 30.2 | -16 |
| கன்னியாகுமரி | 65.3 | 86.0 | -24 |
| காரைக்கால் | 11.4 | 32.2 | -65 |
| கரூர் | 18.9 | 12.8 | 47 |
| கிருஷ்ணகிரி | 24.2 | 32.0 | -24 |
| மதுரை | 48.0 | 23.9 | 101 |
| மயிலாடுதுறை | 28.4 | 21.3 | 33 |
| நாகப்பட்டினம் | 15.4 | 21.9 | -30 |
| நாமக்கல் | 63.9 | 23.8 | 168 |
| நீலகிரி | 61.4 | 65.7 | -6 |
| பெரம்பலூர் | 88.7 | 20.7 | 329 |
| புதுச்சேரி | 16.9 | 28.6 | -41 |
| புதுக்கோட்டை | 43.2 | 23.2 | 86 |
| ராமநாதபுரம் | 20.1 | 9.4 | 114 |
| ராணிப்பேட்டை | 25.8 | 30.2 | -14 |
| சேலம் | 58.2 | 31.2 | 87 |
| சிவகங்கை | 50.6 | 25.2 | 101 |
| தஞ்சாவூர் | 10.0 | 19.2 | -48 |
| தேனி | 25.4 | 21.4 | 19 |
| தென்காசி | 42.6 | 15.8 | 169 |
| திருநெல்வேலி | 7.5 | 10.9 | -32 |
| திருப்பத்தூர் | 26.9 | 35.3 | -24 |
| திருப்பூர் | 19.7 | 14.6 | 35 |
| திருவள்ளூர் | 18.4 | 27.6 | -33 |
| திருவண்ணாமலை | 21.2 | 31.5 | -33 |
| திருவாரூர் | 17.5 | 19.3 | -9 |
| தூத்துக்குடி | 24.7 | 4.1 | 501 |
| திருச்சிராப்பள்ளி | 46.2 | 20.0 | 131 |
| வேலூர் | 46.0 | 34.2 | 34 |
| விழுப்புரம் | 21.4 | 22.6 | -5 |
| விருதுநகர் | 28.1 | 12.4 | 127 |